**தேயிலை ஆராய்ச்சி சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை**

| உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பந்திகள் 48 மற்றும் 49 இன் படி, நிதிக்கூற்றுக்களில் | இத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் உரிய காலத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடுசெய்யப்படக்கூடாது மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தனித்தனியாக அறிக்கையிடப்பட வேண்டும், நடைபெற்றுவரும் செயற்திட்டங்களுக்காக சபைக்கு பெற வேண்டிய ரூபா 4,713,704 பெறத்தக்க நிலுவையாகக் கணக்கிடப்படவில்லை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளில் இருந்து கழிக்கப்பட்டமையால் சபையின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகள் அந்தத் தொகையால் பெறுமதி குறைவடைந்திருந்தது. | என்பதால், செயற்திட்டத்திற்குரிய பணம் கிடைக்கும் வரை செலவுகள் மேற்கொள்ளப்பட்டதால், வரவு மீதியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களில் ஒரே கணக்குத் தொகுதிக்கு சொந்தமான நிலுவைகள் ஒன்றாக சமர்ப்பிக்கப்படல் பயன்பாட்டுக்கு இலகுவானதாக உள்ளமையால் வரவு மீதி கணக்குகள் மற்றும் செலவு மீதிக் கணக்குகள் தனியாக குறிப்புகளின் கீழ் வழங்கப்படுகின்றன. | இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாது. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் பந்தி 69 இன் படி, 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனித் கூம்ப்ஸ் தோட்ட ஊழியர்களுக்கான ஊக்கத்தொகையை செலுத்துவதற்காக ரூபா 1,289,006 ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 கணக்காண்டினுள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளில் ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு இணக்கப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் படி, பரிமாற்றப்படாத பரிவர்த்தனையின் விளைவாக தேறிய சொத்துக்களின் அதிகரிப்பினை நிறுவனமொன்று இனங்காணும் போது அதனை வருமானச் செலவினமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 34,475,431 நிதி செயலாற்றல் அறிக்கையில் வருமானச் செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 429,910,000 வரிக்கு உட்படாத வருமானம் என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட மூலதன சொத்துக்களுக்காக 2023 ஆம் ஆண்டுடன் அங்கீகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 86,527,960 பிற்போடப்பட்ட வருமானமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கடனை வருமானச் செலவினம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் வளாகத்திலும் தோட்டங்களிலும் நடப்பட்டுள்ள மஹோகனி, பலா மற்றும் யூகலிப்டஸ் போன்ற 10,629 மதிப்புமிக்க உயரமான நிழல்தரும் மரங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் 13 மற்றும் 16 ஆம் பந்திகளின் பிரகாரம் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் என இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அடையாளம் காணப்பட்ட மரங்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கான முதற்கட்ட பணிகள் அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உயிரியல் சொத்துக்களின் பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு மதிப்பு ரூபா 445,401 குறைவாக கணக்கு வைக்கப்பட்டு இருந்ததால், மீளாய்வாண்டின் மிகையானது அந்தத் தொகையால் அதிகமாகக் கணக்கிடப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு கணக்கீட்டு ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தேய்மானத்தைக் கணக்கிடுவதில் உள்ள கணக்கீட்டு வழு சரி செய்யப்படும். | கணக்கீட்டு கொள்கைகளின்படி தேய்மானம் கணக்கிடப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேயிலை ஆராய்ச்சி சபைக்கு உரித்தற்ற இலங்கை தேயிலை சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட 03 வாகனங்கள் ரூபா 3,750,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததால், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் மீளமதிப்பீட்டு துக்கமும் அந்த பெறுமதியால் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. | இலக்கம் 32-1809 கொண்ட வாகனம் பழுதுபார்க்கப்பட்டு ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், 90-6217 இலக்கமுடைய வாகனம் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் படி கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 32-1806 இலக்கமுடைய வாகனத்தை பழுதுபார்க்க ஒரு என்ஜின் ஒன்றை வாங்குவதற்கு பாதீட்டு ஒதுக்கீடு இல்லாததால், வாகனம் தொடர்பில் மேலதிக பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் மட்டுமே மீளாய்வு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் தேயிலை சபை ஆகியவற்றிற்கு தேயிலை ஆராய்ச்சி சபைக்கு தேயிலை விற்பனையில் பெற வேண்டிய ரூபா 494,194 புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் கடன் பட்டோராகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு சபையால் இயலாதிருந்தது. | இந்த நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டிய தொகை குறித்து கடிதம் அனுப்ப தோட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. | மூன்று செயலில் உள்ள நிறுவனங்களால் செலுத்த வேண்டிய இந்த நீண்ட கால கடன்களை வசூலிக்க சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் பல்வேறு மொத்த விற்பனையாளர்களுக்கு 02 முதல் 10 ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 1,931,878 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரிமை கோரப்படாத கடன் வழங்குநர்களுக்குத் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபா 137,632 தொகை ஆவணங்களை பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் நிதி முறைகேடு தொடர்பான விவகாரங்கள் தீர்க்கப்படும் வரை ரூபா 1,682,514 செலவு வைக்காதிருப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ் குழுவில் பரிந்துரைக்கப்பட்டது. எஞ்சிய தொகையான ரூபா 111,730 குறித்து ஆவணங்கள் சரிபார்த்து பணம் செலுத்தப்படும். | நிலுவையில் உள்ள மீதிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கும், உரிமை கோரப்படாத கடன் வழங்குநர்களுக்கு தேவையான சீராக்கங்களை செய்யவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொது திறைசேரிக்கு 03 வருடங்களுக்கு மேலாக செலுத்த வேண்டிய நிலுவைகள் முறையே ரூபா 480,000 மற்றும் ரூபா 699,717 மீளாய்வாண்டின் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படும். | செலுத்த வேண்டிய மீதித் தொகையை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இறுதி வரையிலும் செலுத்தப்படவில்லை.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி | 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் ஆண்டறிக்கை 2024 யூலை 01 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி , சபையின் ஆண்டறிக்கைகள் உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 180 நாட்களுக்கு மேலாக தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 93 ஊழியர்களுக்கு 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை. | அரச சேவை ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிற்கு சமர்ப்பித்து தேவையான அனுமதிகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 12,739,502 ஆன மிகையாக ஆனதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 77,885,774 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 65,146,272 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக புனித ஜோக்கின் தோட்டத்தின் மற்றும் புனித கூம்பஸ் தோட்டத்தின் இலாபங்கள் 65 சதவீதத்தினால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமபன மற்றும் செலவினங்களை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தேயிலை விற்பனை வருமானம் 4 சதவீதத்தினாலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் 20 சதவீதத்தினாலும், பச்சை தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் 24 சதவீதத்தினாலும்

அதிகரித்திருந்ததுடன், முறையே போக்குவரத்துச் செலவினம் மற்றும் விநியோகச் செலவினம் மற்றும் நுகர்வுச் செலவினம் 49 சதவீதத்தினால் மற்றும் 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வு ஆண்டின் நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகதம் 4:1 மற்றும் 3:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதம் 4:1 மற்றும் 3:1 ஆக காணப்பட்டது. 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது இருப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளில் ரூபா 241,363,431 மற்றும் ரூபா 219,821,063 ஆக காணப்பட்டமை மிகை செயற்படு மூலதன நிலைக்கு காரணமாக அமைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் சிறப்பு செயற்திட்டங்களின் கீழ், காலநிலை மாற்றத்திற்கான தேயிலை செடியின் தகவமைப்புப் பதில்களை ஆய்வு செய்வதற்காக, 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 12,554,583 செலவில் இந்தியாவிலிருந்து வாங்கப்பட்ட உபகரணங்கள் (Walk in Type Environmental Controlled Facility) எதிர்பார்க்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணங்காததாலும், எதிர்பார்த்த அளவில் அதன் செயல்திறன் இல்லாததாலும், 5 ஆண்டுகளாகக் கடந்திருந்த போதிலும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்த முடியாது செயலற்ற நிலையில் இருந்த போதிலும், அந்த பெறுகையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு அது தொடர்பில் இதுவரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரம் நிறுவிய பின் குறிப்பிட்ட அமைப்பக்குறிப்புடன் ஒத்துப்போகவில்லை என்று தாவர உடற்கூறு விஞ்ஞானப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட இயந்திரம் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் விவரக்குறிப்புகளுக்கு இணங்கவில்லை என்றும், வழங்குநரால் ஒப்பந்தத்தின் நிபந்தனை மீறப்பட்டமை தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் விதிமீறல் பிரச்சினைக்கு சாதகமாக பதிலளிக்கவில்லை என்பதால் ரூபா 12,554,583 மற்றும் குறித்த தொகை செலுத்தப்படும் வரை அதற்கான சட்டரீதியான வட்டியைப் பெற்றுக்கொள்வதற்காக, முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு எதிராக கட்டளையொன்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | பொறுப்புக்கூற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நட்டத்தினை அறவிட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு தலவாக்கலை | வலஹந்துவ தோட்டம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதாலும், அரச | நிலத்திற்கான குத்தகைப் பத்திரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பெருந்தோட்டக் கம்பனி மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் முறையே சபையால் ரூபா 73,933,378 செலவழித்து, வலஹந்துவா, தெனியாய மற்றும் கொட்டவ பிரதேச அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணித்து, சபையின் சொத்துக்களாகக் கணக்குப் வைக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி காணிகள் சபையின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கப்படவில் லை. | பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் இத்தோட்டம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் உத்தரவு நிலுவையில் உள்ளதாலும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் பயன்படுத்தி வரும் ஹெக்டேர 01 இற்கு மேற்பட்ட நிரலப்பரப்பின் சட்டரீதியான உரித்து தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாதுள்ளது. கொட்டவ ஆலோசனை மற்றும் விஸ்தரிப்பு நிலையத்தின் காணியின் அளவானது 50 ஏக்கருக்கும் அதிகமாக இருப்பதால், அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்காக விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தெனியாய ஆலோசனை மற்றும் விஸ்தரிப்பு நிலையத்திற்கான குத்தகை பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சுவர்ணமய பங்குகளின் உரிமையாளரின் அனுமதியையும் ஜனாதிபதியின் செயலாளரின் இணக்கப்பாட்டையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அல்லது சட்டப்பூர்வ உரிமையை உடனடியாக கையகப்படுத்தி, சொத்துக்களுக்கு முறையாகக் கணக்கு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முழு ஊதியத்துடன் கல்வி விடுப்பு பெற்று வெளிநாடு சென்று மீண்டும் பணிக்குத் திரும்பாமல், பணிக்குத் திரும்பிய பின்னர் கட்டாய சேவைக் காலம் முடிவதற்குள் சேவையை விட்டுச் சென்றுள்ள 04 உத்தியோகத்தர்கள் 2005ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறியதுடன் தொடர்புடைய பிணைமுறிப் பெறுமதியான ரூபா 15,054,891 தொகை 2023 ஆண்டு இறுதி | பிணைமுறிகளின் பெறுமதிக்காக நிறுவனத்தினால் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை மீறியமை தொடர்பில் சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை . | | |
| (இ) | 2018 ஆம் ஆண்டு முதல், புனித கூம்ப்ஸ் தோட்டத்தில் தேயிலை விற்பனை நியைம் ஒன்றிற்காக உற்பத்தி செய்யப்பட்ட கொள்கலன் காட்சியறையை நிறுவும் பணி நிறைவடையவில்லை, அதற்காக செலவிடப்பட்ட ரூபா 760,604 நடைமுறைக் பணிகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நுவரெலியாவில் தேயிலை விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சின் சட்ட அதிகாரி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவுறுத்தி, கள கண்காணிப்பு நடத்தி, சம்பந்தப்பட்ட கொள்கலன் வளாகத்தில் சேதமடைந்தவாறு காணப்படுகிறதா என்பதைக் கண்டறிந்து, நிறுவனத்தின் பொறுப்பான நபருக்கு அவர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண்ணில் தெரிவிக்க வேண்டும் என அமைச்சின் சட்ட உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொள்கலன் காட்சியறையின் பணியை விரைந்து முடிக்க அல்லது சட்ட நடவடிக்கை மூலம் பணத்தை வசூலிக்கவும், முடிக்கப்பட்ட பணிகளை கணக்குகளில் சரியாக சீராக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபைக்கான முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் 2020 ஏப்ரல் 22 அன்று ரூபா 4,228,700 தொகைக்கு அரச கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன், 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 1,141,749 முற்பணமாக செலுத்தப்பட்டது. சேவை வழங்குநர் நிறுவனம் சமர்ப்பித்த விலைக்கேள்வி ஆவணங்களின்படி, கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் வேலையை முடிக்க வேண்டிய போதிலும், | வழங்குநர் நிறுவனத்தினால் செயலாற்றல் பிணைமுறியின் காலத்தை நீட்டித்து நிர்மாண பணிகளை மேற்கொண்டு வருகிறதுடன், தற்போது மனித வள முகாமைத்துவம், சம்பளப் பதிவேடு, பொருட்கள் மற்றும் களஞ்சியக் கட்டுப்பாடு, நிதி மற்றும் கணக்கீடு, பராமரிப்பு மற்றும் சேவை தொகுதிகள் ஆகியவற்றின் உற்பத்தி பணிகள் இறுதி கட்டத்தில் காணப்படுகின்றன. | முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை உடனடியாக நிறைவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2024 யூன் வரையிலும் 4 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலை ஆராய்ச்சி சபைக்கு சொந்தமான தலவாக்கலையில் உள்ள லேம்லியர் தோட்டத்தின் 1.367 ஹெக்டேர் நிலப்பரப்பு, தொழிற்சாலை மற்றும் அனைத்து கட்டிடங்களும் 2003 ஆம் ஆண்டு 50 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி வாடகையை செலுத்தாததால் தொடர்புடைய சொத்துக்கள் மீண்டும் கையகப்படுத்தப்பட்டன. ஆனால் கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2024 யூலை வரை அதாவது 08 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தன. | அரச காணிகளை அப்புறப்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சிடம் ஆலோசிக்கப்பட்டதுடன், தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்குரிய லாமிலியர் தோட்டம் உட்பட அதன் தோட்டங்களின் காணி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பயன்பாடு மற்றும் பராமரித்தல் தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அவதானிப்புகளின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை திறம்பட பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேயிலை ஆராய்ச்சி சபையின் பதவியணியின் நலன்புரி 1959 யூன் 01 முதல் அங்கீகரிக்கப்பட்ட நலன்புரி நிதியமாக 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி தொழில் ஆணையரால் சான்றளிக்கப்பட்டது. இந்த நலன்புரி நிதியத்தின் முகாமைத்துவ விதிகளின் பிரிவு 4(i) இன் படி, நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் | 2022 டிசம்பரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தேயிலை ஆராய்ச்சி நிறுவன ஊழியர் நலன்புரி நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் எண்ணிக்கையை ஐந்தாக மாற்றுவதற்கு சபைப் ஏற்றுக்கொண்டது. உரிய திருத்தங்களை மேற்கொள்ள தொழில் ஆணையருக்கு உரிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு, உரிய திருத்தங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். | நலன்புரி நிதியத்தின் முகாமைத்துவ விதிகளின்படி, நம்பிக்கைப் பொறுப்பு சபையை நியமித்து, திருத்தியமைத்து, தேயிலை ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர்களின் நிதியை திறமையாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் (நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தலைவர்), இரண்டு உறுப்பினர்களை நிதியத்தின் தலைவர் பரிந்துரைத்தார். பணிப்பாளர்களிடமிருந்து நிதி, நிதியம் மற்றும் இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்களில் இருந்து பொதுச் சபையினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், நியமிக்கப்பட்ட நிதியமானது தேயிலை சபையின் உறுப்பினர்கள் அல்லாத இரண்டு அதிகாரிகள் உட்பட ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும், தலைவர் 2024 ஜூலை 01 ஆந் திகதி வரையிலும் தேயிலை சபையின் இரு உறுப்பினர்களை நம்பிக்கைப் பொறுப்புக் குழுவில் நியமிக்கவில்லை. | | திறமையாகவும் பராமரிக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான புனித கூம்ப்ஸ் தோட்டத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிதி மோசடிகள் காரணமாக ரூபா 10,321,858 மீதியானது 05 வருடங்களுக்கும் மேலாக கடனாளிகளாக உள்ள போதிலும், ஆனால் சபை உரிய விசாரணைகளை நிறைவு செய்யவில்லை மற்றும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக இந்த நிதி மோசடி தொடர்பில் எதிர்காலத்தில் வழக்குத் தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, அது தொடர்பில் செயற்படும் அரச சட்டத்தரணியால் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி மோசடி தொடர்பாக, விசாரணைகளை தாமதமின்றி நிறைவு செய்து, தீர்ப்புகளின்படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 36 நிலவிய போதும் | பிரிவுத் தலைவர் பதவி என்பது உள்ளக பதவி உயர்வு எனடபதுடன், அந்த பதவிக்கு உள்நாட்டில் தகுதிகளை பூர்த்தி செய்த | வெற்றிடம் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அத்தியாவசிய |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றுள் 27 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களிடையே 03 பிரிவுத் தலைவர் பதவிகளும் 14 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளும், 05 பிரதான மதியுரை உத்தியோகத்தர் பதவிகளும் உள்ளடங்களாக 22 பதவிகள் உள்ளக பதவியுயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய போதிலும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்ததுடன், ஏனைய பதவிகளுக்கு பணியமர்த்துவதற்கு தேவையான அனுமதியைப் பெற அமைச்சின் மூலம் பொது சேவைகள் ஆட்சேர்ப்பு செயல்முறையின் மீளாய்வுக் குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், மற்ற பதவிகளுக்கு அந்த ஒப்புதலின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பணிகளை துரிதமாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் செயல்பாட்டு மற்றும் ஆலோசனை உத்தியோகத்தர் பதவிகளின் 62 சதவீதமும், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின 53 சதவீதமும், முதன்மை நிலை (பயிற்சி பெற்ற) பதவிகளின் 57 சதவீதமும், முதன்மை நிலை (பயிற்சி பெறாத) பதவிகளின் 54 சதவீதமும் வெறிறிடமாக உள்ளன, மேலும் 17 சிரேஷ்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளின் 27 இருந்தாலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் முறையே 5 மற்றும் 15 பதவி வெற்றிடங்கள் நிலவின. | 2024 ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் கணக்காளர்கள் மற்றும் செயல்பாட்டு மற்றும் அமுலாக்கப் பிரிவுகளின் 10 பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் பெறுகை உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை நடத்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, சபையின் மற்றும் அமைச்சின் ஒப்புதலின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.<br><br>அரச சேவை ஆட்சேர்ப்பு செயல்முறை மீளாய்வுக் குழு மூலம் முதன்மை சேவை பிரிவு பதவிகளுக்கு ஊழியப்படையால் 05 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அத்தியாவசிய பதவிகளுக்கு மட்டுமே தேவையான அனுமதிகளைப் பெற்ற பிறகு விரைவாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதவிகளை நிரப்புவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதுடன், மேலும் தேவையான நியாயங்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மற்ற பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு அமைச்சுகளின் மூலம் பொது சேவை ஆட்சேர்ப்பு செயல்முறையின் மீளாய்வுக் குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டில் மனிதவள முகாமைத்துவத்திற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை தயாரிப்பதற்குரிய செயல்நடவடிக்கை கையேட்டினை உருவாக்குதல் மற்றும் திறைசேரிச் செயலாளரின் ஒப்புதலைப் பெறுதல் தொடர்பான பணிகள் மீளாய்வாண்டின் போதும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுப்பிக்கப்பட்ட அலுவலக நடைமுறைகள் கையேட்டின் வரைவை மறுபரிசீலனை செய்வதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மனித வள முகாமைத்துவத்திற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவது தொடர்பான நடைமுறை கையேட்டைத் தயாரிப்பது திறமையாக முடிக்கப்பட வேண்டும் மற்றும் சரியான ஒப்புதல்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். |